
1017

# சுதந்திரப் போர்

சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார்

வெளியிட்டது.



170734

காந்தி ஆசிரமம்,

திருச்செங்கோடு.

ட. லோகநாதன்
செப்பனிடுபவர் பெயர்
நவம்பர் 1996
செப்பனிடுவதற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட நாள்
மார்ச் 1997

சரிபார்க்கும் மு.பா. கையொப்பம்
27/3/97

ஆராய்ச்சி உதவியாளர் கையொப்பம்
10/4/97

சென்னை

ஹிந்திபிரசார அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

# முருகன் துதி

முருகா — முருகா — முருகா.

வருவாய் மயில் மீதினிலே
வடிவே லுடனே வருவாய்
தருவாய் நலமுந் தகவும் புகழுந்
தவமுந் திறமுந் தனமுங் கனமும். (முருகா)

அடியார் பலரிங் குளரே
அவரை விடுவித் தருள்வாய்!
முடியா மறையின் முடிவே, யசுரர்
முடிவே கருதும் வடிவே லவனே! (முருகா)

சுருதிப் பொருளே வருக
துணிவே கனலே வருக
கருதிக் கருதிக் கவலைப் படுவார்
கவலைக் கடலைக் கடியும் வடிவேல். (முருகா)

---

# சுதந்திர தாகம்

என்று தணியு மிந்த சுதந்திர தாகம்?
என்று மடியுமெங்கள் அடிமையில் மோகம்?
என்றெம தன்னை கை விலங்குகள் போகும்?
என்றெம தின்னல்கள் தீர்ந்து பொய்யாகும்?
அன்றொரு பாரதமாக்க வந்தோனே,
ஆரியர் வாழ்வினை யாதரிப் போனே!
வென்றி தருந்துணை நின்னருளன்றோ?
மெய்யடியோ மின்னும் வாடுதல் நன்றோ?

---

# வந்தே மாதரம்

வந்தே மாதர மென்போம்—எங்கள்
மாநிலத் தாயை வணங்குது மென்போம். (வந்)

ஆயிர முண்டிங்கு ஜாதி—எனில்
அன்னியர் வந்து புகலென்ன நீதி?—ஓர்
தாயின் வயிற்றிற் பிறந்தோர்—தம்முட்
சண்டை செய்தாலும் சகோதர ரன்றோ? (வந்)

ஒன்று பட்டா லுண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கி லனைவர்க்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற்பின் நமக்கெது வேண்டும்? (வந்)

எப்பதம் வாய்த்திடு மேனும்—நம்மில்
யாவர்க்கு மந்த நிலை பொது வாகும்
முப்பது கோடியும் வாழ்வோம்—வீழில்
முப்பது கோடி முழுமையும் வீழ்வோம். (வந்)

புல்லடிமைத் தொழில் பேணிப்—பண்டு
போயின நாட்களுக் கினி மனம் நாணித்
தொல்லை யிகழ்ச்சிகள் தீர—இந்தத்
தொண்டு நிலைமையைத் தூவென்று தள்ளி (வந்)

# பூரண சுயராஜ்ய பிரதிக்ஞை

பாரத தேசம் முழுவதும் 1930-வு ஜனவரி 26உ, சுக்கிலவு தை 13உ ஞாயிற்றுக்கிழமை யன்று மகா ஜனங்களால் அங்கீகரிக்கப் பட்ட தீர்மானம் :—

இதரதேச ஜனங்களைப்போல் இந்தியாவின் ஜனங்களுக்கும் சுதந்திரம் பெற்றுத் தாம் பாடுபட்டுப் பெறும் உணவை உண்டு அநுபவித்து சுகமாக வாழும் உரிமையுண்டு. எந்த அரசாங்கமாவது மகா ஜனங்களுக்கு இந்த உரிமை இல்லாமற் செய்து அவர்களைத் துன்புறுத்திவந்தால் அந்த அரசாங்கத்தை மாற்றவோ அல்லது நீக்கவோ ஜனங்களுக்கு உரிமையுண்டு. இந்தியாவை அரசாண்டுவரும் பிரிட்டிஷ் சர்க்கார் இந்திய ஜனங்களின் சுதந்திரத்தைப் பறித்ததுமன்றி, நாட்டின் பொருளைக் கொள்ளை கொண்டு போவதையே தங்கள் ஆட்சியின் மூலதத்துவமாகச் செய்து, இந்தியாவின் செல்வம், கட்டுப்பாடு, கல்வி, தர்மம் அனைத்தையும் நாசப் படுத்தி விட்டார்கள்.

ஆகையால் பிரிட்டிஷ் சம்பந்தத்திலிருந்து விலகி பாரதநாடு பூரண சுயராஜ்யம் அடைய வேண்டுமென்று நாம் உறுதி கொள்கிறோம்.

இந்தியாவின் செல்வம் நாசமடைந்து நாட்டைக் கொடிய வறுமை குடிகொண்டிருக்கிறது. வருமானத்துக்குத் தகாத அளவில் ஏழை ஜனங்களிடமிருந்து மிதமிஞ்சிய வரிப்பணம் வசூலிக்கப் படுகிறது. இந்தியர்களின் சராசரி வருமானம் தலைக்கு ஒரு நாளைக்கு $1\frac{3}{4}$ அணா தான். மொத்தம் வசூலிக்கப்படும் வரிப்பணத்தில் பெரும்பாகம் ஏழைக் குடியானவர்கள் கஷ்டப்பட்டுச் செலுத்தும் நிலவரியாகும். இது தவிர, உப்பு வரியும் எளியவர்களையே அதிகமாகப் பாதிக்கிறது.

நூல் நூற்றல் முதலிய குடித்தொழில்கள் அடியோடு நாசமாயின. குடியானவர்கள் வருஷத்தில் நாலு மாதம் வேலையின்றி யிருக்கிறார்கள். தொழிலில்லாமையால் ஜனங்களின் புத்தியும் உணர்ச்சியும் மழுங்கி வருகின்றன. அழிக்கப் பட்ட கைத் தொழில்களுக்குப் பதில் இதர தேசங்களில் போல் வேறு புதிய கைத் தொழில்கள் ஏற்படுத்தவுமில்லை. விவசாயிகளின் சுமை இன்னும் அதிகமாகுமாறு இறக்குமதி வரியையும் நாணயச் செலாவணியையும் அமைத்து வருகிறார்கள். இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்கும் நடக்கும் பணப் போக்குவரவில் சூழ்ச்சிகளும் யதேச்சாதிகாரமும் நடத்திக் கோடிக்கணக்கில் நாட்டுக்கு நஷ்ட முண்டுபண்ணி யிருக்கிறார்கள். ஜனங்கள் கொடுக்கும் வரிப் பணத்தை உத்தியோகஸ்தர்களுக்கு ஏராளமான சம்பளம் கொடுத்து வீணாக்குகிறார்கள்.

இது வரையில் செய்துவந்த அரசியல் சீர் திருத்தங்கள் உண்மையில் ஜனங்களுக்கு அதிகாரத்தை யளிக்கவில்லை. நம்முள் மிகப் பெரியவர்களும் அன்னியர் அதிகாரத்துக்குப் பணியவேண்டி யிருக்கிறது. அபிப்பிராயத்தைத் தாராளமாக வெளியிடும் உரிமையும், சங்கம் அமைத்து வேலைசெய்யும் உரிமையும் நமக்கில்லாமல் செய்திருக்கிறார்கள். இந்தியர்களின் அரசியல் திறமை நசுக்கப்பட் டிருக்கிறது. பொறுப்புள்ள வேலைகளை இந்தியர்களுக்குக் கொடுப்பதில்லை.

பிரிட்டிஷ் கல்விமுறை நமது இலட்சியங்களைப் பாழ்படுத்தி அடிமைப் புத்தியை வளர்த்துப் பராதீனத்தையே விரும்பும்படி செய்து வருகிறது.

ஆயுதமேந்தும் உரிமை பறிக்கப்பட்ட படியால் ஆண்மை யிழந்தவர்களானோம். அன்னியர்களையே நமது பாதுகாப்புக்கு நம்பியிருக்கச் செய்துவிட்டார்கள். இதனால் நம்மைக் காப்பாற்றிக் கொள்ளும் சக்தி நமக்கில்லை யென்றெண்ணி

விட்டோம். அன்னியர் படையெடுத்து வந்தால் நாட்டைக் காப்பாற்ற நம்மால் முடியாதென்று எண்ணும்படி செய்து விட்டார்கள். திருடர், கொள்ளைக்காரர், போக்கிரிகள் முதலியவர்களை எதிர்த்து மனைவி மக்களைக் காப்பாற்றக்கூட நம்மால் முடியாதென்று நினைக்கலானோம்.

இத்தகைய நஷ்டங்களை உண்டாக்கி வரும் அரசாட்சிக்கு இனியும் பணிந்திருப்பது ஜன சமூகத்துக்கும், தெய்வத்துக்கும் துரோகம் செய்வதாகுமென்று தீர்மானிக்கிறோம். விடுதலை யடைவதற்குச் சிறந்த வழி பலாத்காரமல்லவென்பதை அறிந்துள்ளோம். ஆகையால் பிரிட்டிஷ் அரசாங்கத்துடன் ஒத்துழைப்பதை சாத்தியமான வரையில் நிறுத்தி வரிகொடாமை உள்பட சாத்வீக சட்ட மறுப்பு நடத்தத் தயார் செய்து கொள்வோம். பலாத்காரத்துக்குத் தூண்டப்பட்டாலும், ஆத்திரம் உண்டாகும் சந்தர்ப்பம் ஏற்பட்டாலும், நாம் சாத்வீக முறையிலேயே நின்று ஒத்துழையாமையும், வரி கொடா இயக்கமும் நடத்தினோமானால் கொடுங்கோலாட்சியை ஒழிக்க முடியுமென்று உறுதியாக நம்புகிறோம்.

ஆகையால் பாரத நாட்டில் பூரண சுயராஜ்யம் ஸ்தாபிப்பதற்குக் காங்கிரஸ் மகாசபை அவ்வப்போது இடுகிற கட்டளைகளை யெல்லாம் கடவுள் துணையைக் கொண்டு சரிவர நடத்தி வைப்போமாக.

---

# பதினோரு கேள்விகள்

"ஜன நாயகத்துக்கு அவசியமான ஒற்றுமை நாட்டில் இல்லை: ஆகையால் இந்தியாவுக்கு அரசியல் சுதந்திரம் கொடுக்க முடியாது" என்று ஆங்கில அரசாங்கத்தாரும் இராஜப் பிரதிநிதியும் சொல்லி வருகிறார்கள். அதற்கு மகாத்மா கூறிய பதிலாவது :—

"இந் நாட்டில் இப்போது ஒற்றுமை இல்லை யென்பது எனக்குத் தெரியும். ஆனால் வேற்றுமைக்குக் காரணம் அன்னிய அரசாட்சியே. பொறுப்பும் சுயாட்சியும் ஏற்பட்டால் வேற்றுமைகள் விரைவில் தொலையும். ஒற்றுமை யுண்டாக்கிக் கொள்ளும் வரையில் அரசியல் சுதந்திரம் கொடுக்க மாட்டோ மென்று நீங்கள் சொல்லுவீர்க ளானால், சாதாரண ஜனங்களுக்கு நன்மை தந்து நாட்டின் வறுமையைக் குறைக்கக் கூடிய சில சீர் திருத்தங்களாவது ஏன் உடனே செய்யக் கூடாது? உங்களுடைய நல்லெண்ணத்தை நிரூபிக்குமாறு சில சீர் திருத்தங்களாவது நீங்கள் உடனே செய்துகொடுத்தால் உங்களுடைய வாக்குறுதிகளை நம்புவதற்கு இட மிருக்கும்" என்கிறார். இத்தகைய பதினொரு முக்கியமான சீர் திருத்தங்களை மகாத்மா குறிப்பிட் டிருக்கிறார். அவை வருமாறு :—

(1) கள்ளு சாராயம் முதலிய லாகிரி வஸ்துக்களின் வியாபாரத்தை ஒழிக்கப் பூரண மதுவிலக்குச் சட்டம் செய்ய வேண்டும்.

(2) நாணய மாற்று விகிதம் ரூபாய்க்கு ஒரு ஷில்லிங் ஆறு பென்ஸாக மாற்றியதை ரத்து செய்து முன்போல் ஒரு ஷில்லிங் நாலு பென்ஸாகச் செய்யவேண்டும்.

(3) நில வரியைப் பாதியளவுக்குக் குறைக்கவேண்டும்.

(4) உப்பு வரியை நீக்கவேண்டும்.

(5) இராணுவச் செலவை உடனே பாதியாக்கிவிட வேண்டும்.

(6) வருமானக் குறைவுக்குத் தகுந்தாற்போல் பெரிய உத்தியோகஸ்தர்களின் சம்பளத்தைப் பாதியாகவோ இன்னும் குறைவாகவோ ஆக்கவேண்டும்.

(7) சுதேசித் துணித் தொழிலைக் காப்பாற்ற அன்னியத் துணிக்கு வரிபோடவேண்டும்.

(8) கரையோரக் கப்பலோட்டும் வியாபாரத்தை சுதேசிக் கப்பல்களே நடத்தச் சட்டம் செய்யவேண்டும்.

(9) கொலைக் குற்றத்திற்காக கோர்ட்டுகளில் தண்டிக்கப்பட்டவர்களை யல்லாமல் மற்ற அரசியல் கைதிகளை யெல்லாம் விடுதலை செய்ய வேண்டும்.

(10) இரகசியப் போலீஸ் இலாகாவை எடுத்து விடவேண்டும்; அல்லது அதைப் பொது ஜன அதிகாரத்தின் கீழ்க் கொண்டுவரவேண்டும்.

(11) தற்காப்புக்காகப் பொது நிபந்தனைகளுக்குட்பட்டு ஆயுதம்வைத்துக் கொள்ளும் உரிமை அளிக்க வேண்டும்.

---

மேற் சொன்ன பதினொரு நிபந்தனைகளையும் அரசாங்கத்தார் ஒப்புக்கொள்ளவில்லை. எனவே, இந்தப் பதினொரு நிபந்தனைகளையும் சர்க்காரின் பதினொரு கோட்டைகளாக மகாத்மா கொண்டு, அவைகளை ஒவ்வொன்றாகக் கைப்பற்றத் தீர்மானித்துள்ளார். பல காரணங்களை முன்னிட்டு முதலில் உப்புவரிக் கோட்டையைத் தகர்க்கப் போர் நடத்தி வருகிறார். உப்புவரிக் கடுத்த படியாக, சர்க்காரின் மதுபானக் கோட்டை மீதும், அன்னியத் துணிக் கோட்டை மீதும் போர் தொடங்குவார்.

# மதுபானக் கேடு

நமது இந்தியா தேசம் முழுவதிலும் 1860-ம் வருஷத்தில் சர்க்கார் அடைந்த கலால் வருமானம் ஒரு கோடி ரூபாய் தான். நாளடைவில் அதன் பெருக்கத்தைப் பாருங்கள் :—

| வருஷம் | சர்க்கார் கலால் வருமானம் |
|---|---|
| 1885 | 4 கோடி ரூபாய் |
| 1890 | 5 ,, |
| 1900 | 6 ,, |
| 1905 | 8½ ,, |
| 1910 | 10½ ,, |
| 1915 | 13 ,, |
| 1920 | 20 ,, |
| 1928 | 24 ,, |

உள் நாட்டில் உற்பத்தியாகும் கள்ளு சாராயம் ஒரு புறமிருக்க, சீமைச் சாராய வகைகளின் இறக்குமதியும் நாளுக்கு நாள் பெருகிவருகிறது. பின்வரும் கணக்கைப் பாருங்கள் :

| வருஷம் | இறக்குமதி (காலன்) |
|---|---|
| 1896 | 7,01,177 |
| 1905 | 12,97,611 |
| 1928 | 62,07,343 |

பாடு பட்டு வயிறு வளர்க்கும் ஜனங்களின் பொருளை நாசமாக்குவன சர்க்கார் வைத்துக் காப்பாற்றி வரும் கள்ளு சாராயக் கடைகள்.

தேகத்திற்குக் கள்ளும், சாராயமும் ஒரு நன்மையும் செய்யாது. மயக்கத்தை மருந்தென்றும் பரிகார மென்றும், குடிவெறியை பலமென்றும் தைரிய மென்றும் நினைப்பது அறியாமை. மதுபானம் தேகபலத்தையும் புத்தியையும் கெடுத்துவிடும். அநேக வியாதிகளை உண்டாக்கும், மருந்து கூடப் பிடிக்காமல் செய்யும்.

6



170734

குடியினால் ஒழுக்கமும் கெடும். கொலை, திருட்டு, விபசாரம் முதலிய குற்றங்களுக்குக் அது காரணம். கொஞ்சமாகக் குடிக்க ஆரம்பித்தாலும் அது பிசாசைப் போல் பிடித்துக் கொள்ளும். பிறகு விட்டுவிட வேண்டுமென்ற அறிவு உண்டானாலும் கூட, விடுவதற்கு வேண்டிய மன உறுதியில்லாமல் தடுமாறுவான்.

நம்முடைய நாட்டில் இப்போது அநேக சமூகங்கள் கள்ளு, சாராயம் தீண்டுவதே கிடையாது. ஆனாலும் கள்ளு சாராய வகையராவிற்கு ஏழைகள் போடும் பணம் இந்தியா முழுதும் கணக்கிட்டால் வருஷம் ஒன்றுக்கு 70 கோடி ரூபாய் ஆகிறது. இதில் சர்க்கார் வருமானம் வருஷம் ஒன்றுக்கு 24 கோடி ரூபாய். சென்னை மாகாணத்தில் மொத்தம் சர்க்காரின் நிலவரி வருமானமே ரூ. 7½ கோடியாயிருக்க, கள்ளு சாராயத்தில் சர்க்கார் வருமானம் ரூ. 5½ கோடி. குடிக்காகப் போகும் பணம் தென்னாட்டில் மட்டும் நாள் ஒன்றுக்கு 6 லக்ஷம் ரூபாய் என்று கணக்கிடலாம். மதுபானக் கடைகள் தொலைந்தால் இவ்வளவு பொருளும் நாட்டுக்கு மிஞ்சும். நாட்டில் கொலையும், களவும், மற்ற குற்றங்களும், ஒழுக்கங்கெட்டு நடப்பதும், வறுமைப் பிணியும், வியாதிகளும் குறைந்துபோகும். எத் தொழிலும் விருத்தியடையும். ஏழைகள் வீட்டில் காசு மிஞ்சும். கடன்கள் தீரும். எல்லாருடைய வியாபாரமும் நன்றாக நடக்கும். எல்லா சொத்துக்களுடைய விலை மதிப்பும் ஏறும்.

மது பானத்துக்கு முக்கிய ஆதரவு சர்க்காரே. அவர்கள் வைத்திருக்கும் கடைகள் மூடப்பட்டால், திருட்டுத் தனமாய்க் குடிப்பது நாளடைவில் நின்றுபோகும். பழைய குடியர்கள் கெட்டாலும் புதிய குடியர்கள் உண்டாகமாட்டார்கள். சில வருஷங்களுக்குப் பிறகு நாட்டில் குடியென்பது முற்றிலும் ஒழிந்து போகும்.

# உப்பு வரியின் கொடுமை

இந்தியாவின் கடற்கரை விஸ்தீரணம் 5000 மைல். சூரிய வெப்பத்தை உபயோகித்து சிரமமும் செலவு மில்லாமல் எங்கேயும் வேண்டிய உப்பு செய்து கொள்ளலாம். கடலோரத்தைத் தவிர இராஜபுதனம், பஞ்சாப், ஸிந்துதேசம் முதலிய பிரதேசங்களில் ஏராளமான உப்பு மலைகளும் சுரங்கங்களும் உண்டு. இந்தியா முழுவதுக்கும் வேண்டிய உப்பு இவ்விடங்களில் எடுக்கலாம். கடலோரத்தில் அநேக இடங்களில் வருஷம் ஒருமுறை தானுகவே ஏராளமான உப்பு உண்டாகிறது. அவ்விடங்களில் போய் எடுத்துக்கொள்ளும் சிரமம் ஒன்று தவிர எவ்விதச் செலவுமில்லாமல் நல்ல உப்பு ஏராளமாய்க் கிடைக்கும்.

இவ்விதம் கடவுள் இந்தியாவுக்கு உப்பைப் படைத்திருக்க, ஆங்கில அரசாட்சியின் பயனுக தற்போது இந்தியாவுக்கு வேண்டிய உப்பில் மூன்றில் ஒரு பங்கு வெளி தேசங்களிலிருந்து கப்பல்களில் வந்ததை விலை கொடுத்து வாங்கி வருகிறோம். உப்பின்மேல் சர்க்கார் பெரிய வரி போட்டிருக்கிறார்கள். அசல் விலைக்கு 15 அல்லது 20 மடங்கு அந்த வரி. இந்த அநியாய வரியைத் தவருமல் வசூலிப்பதற்காகவே யாரும் உப்புசெய்யக் கூடாது, சர்க்கார் தான் செய்யவேண்டும், அல்லது அவர்கள் குறிப்பிட்டு பந்தோபஸ்து செய்து மேல் பார்வைக்காக உத்தியோகஸ்தர்கள் நியமித்திருக்கும் இடத்தில்தான் லைசென்ஸ் பெற்றுக் கொண்டு யாராவது செய்யலாம் என்று விதித்திருக்கிறார்கள். மணங்கு ஒன்றுக்கு ரூ. 1—4—0 வரி போட்டிருக்கிறார்கள். தவிர, உற்பத்தியை அடக்கு முறைக்கு உட்படுத்தியிருக்கிறபடியால் உற்பத்திச் செலவும் அதிகமாய் விட்டது. பந்தோபஸ்து, பாரா முதலிய செலவுகள் எல்லாம் உப்பின் பேரில் போட்டிருக்கிறார்கள். எல்லாம் சேர்த்து, ஒரு மூட்டை

உப்பின் அசல் கிரயம் ஒரு அணுவாக விருக்க, அதற்குத் தற்போதைய விலை ரூபாய் மூன்று! இது தவிர, குறிப்பிட்ட சில இடங்களில் தான் உப்பு உற்பத்தி செய்து வருகிறபடியால் ஏராளமான ரயில் செலவு ஒவ்வொரு உப்பு மூட்டையின் மேலும் விழுகிறது. இந்தியா முழுதும் உபயோகமாகும் உப்பின் உண்மைக் கிரயம் வண்டிச் செலவு போக அரைக்கோடி ரூபாய்க்குமேல் போகாது. தற்போது அதற்கு 15 அல்லது 20 மடங்கு விலை கொடுத்து வாங்குகிறோம். இதில் சர்க்கார் அடையும் வருமானம் வருஷம் ஒன்றுக்கு 7 கோடி ரூபாய்.

முக்கியமான ஓர் உணவுப் பொருளுக்கு இப்படி வரி விதிப்பதற்கு என்ன காரணம் என்று கேட்டால், சர்க்கார் செய்யும் அதிக செலவே காரணமாகும். இந்த வருமானம் இல்லாமற் போனால் உத்தியோகஸ்தர்களுக்கு ஏராளமான சம்பளங்கள் கொடுக்கமுடியாது. இராணுவச் செலவு முதலிய வீண் செலவுகள் நடத்தமுடியாது. ஏழை ஜனங்களுக்கு வேறு எந்த வரியும் போடமுடியாது. அவர்கள் தின்னும் உப்புக்கு வரி போட்டால் தான் அவர்கள் காசில் ஒரு பங்கு சர்க்காருக்குப் போய்ச் சேரும். இது என்ன அநியாயம், பாருங்கள்! மகான், தாதாபாய் நவுரோஜி அவர்கள், பல வருஷங்களுக்கு முன் சொன்னதாவது:—"பிரிட்டிஷ் ஆட்சி இந்த தேசத்தில் இவ்வளவு நாள் இருந்து வந்தும் ஜனங்களின் பரிதாப நிலை எப்படி இருக்கிறதென்றால், அவர்கள் அநுபவிக்கும் சுகங்களிலும், வாங்கும் பண்டங்களிலும், வரி போடக் கூடிய வாயக்குள்ளது வேறு எதுவுமில்லை. உப்பு ஒன்றுதான் சர்க்காருக்கு அகப்பட்டது. இந்த அரசாட்சி தகுதியற்ற ஆட்சி என்று நிரூபிக்க வேறு எந்த அத்தாட்சியும் வேண்டாம்."

# வைஸராய்க்கு மகாத்மா எழுதிய கடிதம்

இந்தியாவின் வைஸராய் (இராஜப்பிரதிநிதி) லார்ட் இர்வின் துரைக்கு மகாத்மா காந்தி நாளது 1930௵ மார்ச்சு௴ 2உ எழுதிய கடிதத்தின் ஸாராம்சம் :—

பிரிட்டிஷ் ஆட்சியைப் பெருங்கேடாக நான் என் கருதுகிறேன் என்றால், இந்தியாவின் செல்வத்தை இந்த ஆட்சியானது சுரண்டிச் சென்று, எளிய தேசம் தாங்கக்கூடாத இராணுவச் செலவும் நிருவாகச் செலவும் சுமத்தி, ஆட்சேபிக்க வகையில்லாத ஏழை ஜனங்களைத் தீராத வறுமையில் அழுத்தி நம்மை அடிமை நிலையில் இறுத்திவிட்டது. நம்முடைய நாகரிகத்தின் வேரையே பறித்துவிட்டது. ஆயுதப் பறிமுதல் முறையினால் ஆண்மையும் ஆத்ம சக்தியும் இழக்கச் செய்து நம்மைச் செயலற்றவர்களாக்கி விட்டது.

இப்போது சர்க்கார் வசூலிக்கும் வரிப்பணத்தில் பெரும் பாகமாகவிருக்கும் நிலவரியானது தாங்கமுடியாத சுமையாகும். நாம் சுதந்திரமடைந்தபின் அதைக் குறைக்கத்தான் வேண்டும்.

உப்பு ஜீவாதாரமான பொருள். இதன்மீது விதிக்கப்பட்டு வரும் வரியும் ஏழைக்குடியானவர்களின் சுமையையே அதிகப்படுத்துகிறது. இவ்வரி பாரபட்சமின்றி எல்லார் பேரிலும் விதிக்கப்படுவதால், இதன் பளு ஏழை மக்களையே அதிகமான கொடுமைக்குட்படுத்துகிறது. ஏனெனில் ஏழைகள் பணக்காரரைவிட அதிகமாக உண்பது உப்பு ஒன்றுதான்.

கள்ளு, சாராயம் முதலிய லாகிரி வஸ்துக்களிலிருந்து கிடைக்கும் வருமானமும் ஏழைகளிடமிருந்தே வாங்கப்படு

கிறது. இதனால் அவர்களின் தேக சுகம், ஒழுக்கம் இரண்டும் அடியோடு கெட்டு விடுகின்றன. இக்கொடிய வியாபாரம் அதனால் கிடைக்கும் வருமானத்திற்காக சர்க்காரால் நடத்தப்பட்டு வருகிறது. இவ்வாறு ஒரு பக்கத்தில் வரிச் சுமையால் நசுக்கப் படுவதல்லாமல், குடிகளின் முக்கியமான துணைத்தொழிலான நூல் நூற்றல் அழிந்து போனதனால் பொருள் ஆக்கும் சக்தியையும் இழந்தார்கள்.

இந்தியாவின் பெயரால் வாங்கப்பட்டிருக்கும் கடன்களைப் பற்றியும் சொல்லாவிடின் இந்தியா கேடடைந்த சரித்திரம் முற்றுப்பெறாது. இந்தியா சுதந்திரம் அடைந்தவுடன், பட்சபாதமற்ற ஒரு பஞ்சாயத்து ஏற்படுத்தி அதைக் கொண்டு இக்கடன்களைப் பரிசீலனை செய்து அக்கிரமமானவை என ஏற்படும் கடன்களைக் கொடுக்க மறுப்பது எங்கள் கடமையாகும்.

உலகில் வேறெங்குமே இல்லாத பெரிய சம்பளங்கள் உத்தியோகஸ்தர்களுக்குக் கொடுத்து நிர்வாகம் நடத்தவே மேற்சொன்ன இவ்வளவு அநியாய முறைகள் கையாளப் பட்டு வருகின்றன.

தங்களது சம்பளத்தையே பாருங்கள். மாதத்திற்கு 21000 ரூபாய்க்கு மேல் சம்பளம் வாங்குகிறீர்கள். அதற்குக் கூட்டாக வேறு செலவுகளும் உண்டு. பிரிட்டிஷ் முதன் மந்திரிக்கு வருடத்திற்கு 5000 பவுன், அதாவது மாதத்திற்கு 5400 ரூபாய் சம்பளமே தருகிறார்கள். ஆனால் தாங்களோ ஒரு நாளைக்கு 700 ரூபாய் சம்பளம் பெறுகிறீர்கள். இந்திய ஏழை மக்களுக்கு சராசரி தினவருமானம் இரண்டணாகூடக் கிடைப்பதில்லை. கிரேட் பிரிட்டனின் மக்களுக்குச் சராசரி வருமானம் தினமொன்றுக்கு இரண்டு ரூபாயாயிருக்க, அங்குள்ள மந்திரி தினமொன்றுக்கு 180 ரூபாய் சம்பளம் வாங்குகிறார். அதாவது, பிரிட்டனின் சராசரி வருமானத்தைப் போல் 90 மடங்கே பெறுகின்றார். ஆனால் தாங்களோ இந்தியாவின் சராசரி வருமானத்தைப் போல் 5000 மடங்குக்கு

மேல் சம்பளம் பெறுகின்றீர்கள். இதைப்பற்றி நன்றுக் ஆலோசிக்க வேண்டுமென்று தங்களைப் பணிந்து கேட்கின்றேன்.

உண்மையைத் தெளிவாக்குவதற்காக ஒரே ஓர் உதாரணத்தை எடுத்துக் காட்டினேனல்லாது வேறல்ல. தங்களிடம் எனக்குப் பெருமதிப்பு உண்டு.

தாங்கள் வாங்கும் சம்பளம் தங்கட்குத் தேவையில்லை என்பது எனக்குத் தெரியும். தங்களுடைய சம்பளம் அவ்வளவும் தரும காரியத்திற்கே போகலாம். இருந்தாலும் இவ்வாறு ஊதாரியாகச் செலவுசெய்யும் அரசுமுறை ஒழிக்கப்பட வேண்டுமென்றே நான் கோருகின்றேன்.

இராஜப் பிரதிநிதி சம்பளத்தைப் போலவே இந்த அரசு முறையில் எல்லாச் செலவுகளும் நடக்கின்றன. இந்தியாவின் வரிச் சுமையைக் குறைக்க வேண்டுமானால், அரசாங்கச் செலவுகளைக் குறைத்தால் தான் முடியும். அதற்கு அரசு மாறவேண்டும். இந்த மாற்றத்தையடைய பூரண சுயராஜ்யமே வேண்டும்.

என் கடிதத்தைப் பார்த்துத் தங்கள் மனம் உருகி மேற்கூறிய கேடுகளை நிவர்த்திக்கத் தாங்கள் முன்வரா விட்டால் இம்மாதம் 11உ எனது ஆசிரமத்திலிருந்து என்னுடைய சகாக்களுடன் உப்புச் சட்ட விதிகளைமீறி நடக்கப் புறப்படப் போகிறேன். ஏழை மக்களுக்கு இந்த வரி மிகவும் கொடுமையானது. சுதந்திர இயக்கம் ஏழைகளுக்காகவே ஆரம்பிக்கப்பட்டதாகையால், அவர்களுக்குக் கொடுமையை விளைவிக்கும் இந்த அநியாய வரியை எதிர்ப்பதே சுதந்திர இயக்கத்தின் முதல் வேலையாகும். என்னைக் கைது செய்து என் கோரிக்கையைத் தடுக்க நீங்கள் முற்படக்கூடும் என்பதை நான் அறிவேன். இந்த உப்பு வரியானது சட்டப் புத்தகத்திலிருந்து எடுபடும் வரையில் இதை எதிர்த்து அதனால் ஏற்படும் துன்பங்களை யனுபவிக்கத் தயாராயிருக்கும் பதினாயிரக்கணக்கான மக்கள் கட்டுப்பாடாக என்னைப் பின்பற்றச் சித்தமாயிருப்பார்கள் என்று நம்புகிறேன்.

## வைஸராயின் பதி[illegible]

மேற்கண்ட மகாத்மா காந்தியின் கடி[illegible] பிரதிநிதியின் அந்தரங்கக் காரியதரிசி "தங்கள் கடிதம் கிடைத்தது. சட்ட மீறுதலும் பொதுஜன அமைதிக்குப் பங்கமும் நிச்சயம் விளையக்கூடிய முறையை நீங்கள் பின் பற்ற உத்தேசிப்பதறிந்து வைஸராய் வருத்தப்படுகிறார்" என்று சுருக்கமாகப் பதில் எழுதியிருந்தார். இந்தப் பதிலுக்குப் பதிலாக மாகாத்மா "எங் இந்தியா"வில் எழுதியது:—

நான் முழந்தாளிட்டுப் பசிக்குச் சோறு கேட்டேன். சோற்றுக்குப் பதில் வைஸராயிடமிருந்து கல்லெறிபட்டேன். தேசமக்கள் ஒவ்வொருவரும் வருஷத்திற்கு ஐந்து அணு அதாவது எறக்குறைய மூன்று தினத்தின் சராசரி வருமானத்தை உப்புக்காக வரி கொடுக்கிறார்கள். இராஜப் பிரதிநிதி ஏழைகளை வருத்தும் இவ்வரியை எடுத்துவிட்டு நான் ஆரம்பித்த போரை நடத்தமுடியாமல் செய்திருக்கலாம்.

அரசாங்க வழக்கப்படி பதிலனுப்பாமல் இன்னும் எவ்வளவோ அவர் செய்திருக்கக் கூடும். ஆனால் அதற்குக் காலம் இன்னும் வரவில்லை. சீக்கிரத்தில் இணங்கும் குணம் ஆங்கில தேசத்தாருக்குக் கிடையாது. செய்ததைத் தப்பென்று எளிதில் உணர்ந்து பச்சாதாபப் படமாட்டார்கள். அத்தகையோருடைய பிரதிநிதி யாவார் வைஸராய். வெறும் வேண்டுகோளுக்கு அவர்கள் இணங்க மாட்டார்கள். ஆனால் மிருக பலத்துக்கு அவர்கள் செவிகொடுப்பார்கள். குத்துச் சண்டை ஒன்று நடந்தால் அதைப் பேராவலுடன் பார்க்க மனமுள்ளவர்கள். எலும்புகள் உடைந்தாலும் பந்து விளையாட்டில் அவர்கள் பித்துக்கொண்டு விளையாடுவார்கள். நடு நடுங்கச் செய்யக் கூடிய பலாத்கார யுத்தக் கொடுமைகளைப் படித்து மகிழ்ச்சியடைவார்கள். யார் எவ்வித கொடூரமான கஷ்டங்களுக்கு ஆளானலும் அதைப் பற்றித் துயரப்பட மாட்டார்கள். எவ்வளவு நியாயமான காரணங்கள் காட்டி

னாலும் தாங்கள் வருஷம் தவறாமல் இந்தியாவிலிருந்து அடையும் லாபத்தை விட்டுக் கொடுக்கமாட்டார்கள்.

வைஸராயின் மறுமொழி எனக்கு வியப்பைக் கொடுக்கவில்லை. நான் என் கடிதத்தில் எழுதியவை சத்தியபிரதிக்ஞையானால் உப்பு வரி தொலைந்தே தீரும்; மற்ற அநியாயங்களும் தீர்ந்துபோகும். காலக்கிரமத்தில் தான் அவற்றில் எவ்வளவு நிறைவேறுமென்பது தெரியக்கூடும்.

சட்டம் மீறுவதிலும், பொதுஜன அமைதிக்கு அபாயத்திலும் முடியக்கூடிய முறையை நான் கைக்கொள்ள உத்தேசித்திருப்பதாய்க் கூறியிருக்கின்றார். சட்டங்களும் விதிகளும் பெரும் காடுபோல எத்தனையோ புத்தகங்கள் நிறைய இருந்தும் இந்தியா அறிந்திருக்கும் சட்டம், ஒன்றே. அது பிரிட்டிஷ் நிர்வாகிகளின் மனம் போன போக்குதான். மேலும் இந்திய சமூகத்தில் தற்போதுள்ள அமைதி சிறைச்சாலையில் உள்ள அமைதியே தவிர வேறல்ல. இந்தியாவே ஒரு பெரும் சிறைச்சாலையாகத்தா னிருக்கின்றது. இத்தகைய ஆட்சியை நான் நிராகரிக்கிறேன். சுதந்திரக் காற்றை சுவாசிக்க முடியாமல் இந்திய சமூகத்தின் தொண்டையைப் பிடித்து அமுக்கும் இத்தகைய பலவந்தமான அமைதியை முறிக்க வேண்டியது என் புனித கடமை யாகு மென்று கருதுகின்றேன்.

---

இராஜப் பிரதிநிதிக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டவாறே காந்தியடிகள் மார்ச்சு௴ 12௳ சபர்மதி சத்தியாக்கிரஹ ஆசிரமத்திலிருந்து 79 தொண்டர்களுடன் பாதயாத்திரையாகக் கிளம்பி, எப்ரல்௴ 5௳ கடற் கரையிலுள்ள தண்டி என்னும் கிராமம் சேர்ந்து, மறுநாள் 6௳ யன்று உப்புச் சட்டத்தைமீறி உப்பு எடுத்து சத்தியாக்கிரஹப் போர் தொடங்கினார். அன்று முதல் தேசமெங்கும் ஆயிரக் கணக்கான ஜனங்கள் உப்புச் சட்டத்தை மீறியுள்ளார்கள். சேத் ஜம்னாலால் பஜாஜ் முதலிய நூற்றுக் கணக்கான தலைவர்களும் தொண்டர்களும் சிறை புகுந்திருக்கிறார்கள்.

## மகாத்மாவின் சிறை

உலக சிரேஷ்டர் சிறை செல்லும் சம்பவமானது நம் ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் ஒரு பெரிய மாறுதலை உண்டு பண்ணவேண்டும். ஏதேனும் தீய வழக்கம் நம்மிடமிருந்தால், இரகசியக் குற்றம் எதற்கேனும் நாம் ஆளாகி யிருந்தால், அன்றுமுதல் அதை விட்டு ஒழித்துத் தூய்மை பெறத் தீர்மானிப்போமாக. பரிசுத்தமூர்த்தியான காந்தியடிகளின் ஆத்ம சக்தி வெள்ளத்தில் அன்றையதினம் குளித்து நம்மிடமுள்ள அழுக்கைப் போக்கிக்கொண்டு மேன்மை பெறுவோமாக.

## நாம் செய்யவேண்டிய தீர்மானம்

“ பிரிட்டிஷ் அரசாங்கம் சுயநலத்தை முன்னிட்டு இந்நாட்டின் செல்வத்தைக் கொள்ளை கொண்டுபோய் வருகிறது. ஜனங்களின் ஆண்மையை அழித்து வருகிறது. ஏழைக் குடியானவர்கள்மீது தாங்கமுடியாத வரிச்சுமை சுமத்தியிருக்கிறது. இப்படி வசூலிக்கும் பணத்தைக் கொண்டு தேசத்தின் வறுமை நிலைக்குப் பொருந்தாத அளவில் உத்தியோகஸ்தர்களுக்குச் சம்பளம் கொடுத்தும், இராணுவத்திற்காக ஏராளமான பணம் செலவிட்டும் வருகிறது. உண்மையான சுதந்திர ஆட்சியை உடனே ஸ்தாபிக்கவும் மறுத்து வருகிறது.

இக் காரணங்களுக்காக................வாசிகளாகிய நாங்கள் இந்த பிரிட்டிஷ் அரசாங்கத்தைக் கண்டனம் செய்கிறோம். கடவுள் துணையை எதிர்பார்த்து, சத்தியாக்கிரஹத்தைக் கைக்கொண்டு, பூரண சுயராஜ்யம் ஸ்தாபிப்போம் என்ற எங்கள் பிரதிக்ஞையை மறுபடியும் உறுதிசெய்கிறோம்.

இந்த நாட்டில் வாழும் ஆண்கள், பெண்கள் அனைவரும் ஆண்டவனையும் சத்தியத்தையும் நம்பி நமது அருந் தலைவர் மகாத்மா காந்தியைப் பின்பற்றி, தங்களுக்கு ஆற்றல் உள்ள மட்டும் இந்தப் போரில் ஈடுபடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.”

# தமிழர் கடமை

தேசவிடுதலைக்காக காந்தியடிகள் தலைமையில் பெரிய சத்தியாக்கிரஹப் போர் நடந்து வருகிறது. எல்லா மாகாணங்களும் தீவிரமாகப் போரில் ஈடுபட்டிருக்கின்றன. தமிழர்களே! உறங்கியது போதும். விழித்தெழுங்கள்.

தமிழ் சத்தியாக்கிரஹிகளின் முதல்படை எப்ரல்மீ 13வ தமிழ் வருஷப்பிறப்பன்று திருச்சினாப்பள்ளியிலிருந்து கிளம்பிவிட்டது. தொண்டர்கள் கால் நடையாகச் சென்று 28வ வேதாரண்யம் சேர்ந்து, அங்கு உப்புச் சட்டத்தை மீறி சத்தியாக்கிரஹம் செய்வார்கள்.

## படையில் சேருபவர்களுக்கு

நீங்களும் இப்போரில் சேரவிரும்பினால், மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு உறுதிமொழியில் கையெழுத்திட்டு அனுப்பிவையுங்கள். எவ்வளவு துன்பங்கள் நேர்ந்தாலும் சகித்துக் கொண்டு கடைசிவரை தைரியமாய் நிற்க உறுதி கொண்டவர்களே போரில் சேரவேண்டும். கையெழுத்திட்டு அனுப்பிவிட்டால், பிறகு எந்த நிமிஷம் அழைத்தாலும் உடனே புறப்படுவதற்குச் சித்தமாயிருக்க வேண்டும்.

## பொது ஜனங்களுக்கு

போரில் நேராக ஈடுபட சௌகரியமில்லாதவர்கள் பின் வரும் வழிகளில் உதவியாவது செய்யலாம்:

(1) இப்போருக்குப் பொருளுதவி தேவை. போர்க் களத்தில் அவசியமான விடுதிகள் அமைப்பதற்கும் மற்றச் செலவுக்கும் பணம் வேண்டும். இதற்கு நீங்கள் உதவும் பணம், தேசத்தின் புனருத்தாரணத்துக்கு உதவுவதாகும்.

(2) உங்கள் ஊரில் உள்ள கள்ளு சாராயக் கடைகளை மூடுவதற்குப் பெருங்கிளர்ச்சி தொடங்குங்கள். கள்ளரக்கனை நாட்டிலிருந்து தொலைப்பதற்கு, தேசத்தில் பெரிய விடுதலைப் போர் நடந்துவரும் இதுவே தக்க சமயமாகும்.

(3) உடனே காங்கிரஸ் அங்கத்தினராகச் சேர்வதுடன் உங்கள் ஊரிலும் தாலூகாவிலுமுள்ளவர்களை அம்மகாசபையில் அங்கத்தினராக்குங்கள். பூரண சுயராஜ்ய இலட்சியத்தில் கையொப்பமிட்டு, வருஷ சந்தா நான்கணா கொடுத்தால் காங்கிரஸ் அங்கத்தினராகலாம். தேசவிடுதலைப் போருக்கு நீங்கள் செய்யக் கூடிய குறைந்த உதவி இதுவே யாகும்.

# சத்தியாக்கிரக உறுதி மொழி

பாரத தேசம் பூரண சுயராஜ்யத்தை சாந்தியும் நியாயமுமான முறைகளைக் கொண்டு அடைய வேண்டு மென்னும் இலட்சியத்தை நான் ஒப்புக்கொள்கிறேன்.

இந்தியா சுயராஜ்யம் அடைவதற்கு அஹிம்சை ஒன்றே முறை என்பது என் உறுதியான கொள்கை.

மகாத்மா காந்தியின் தலைமையின்கீழ் இந்திய மகா சபை ஆரம்பித்திருக்கும் சத்தியாக்கிரகப் போரில் நான் சேர விரும்புகிறேன்.

இயக்கத்தை நடத்தும் தலைவர்களின் உத்திரவுப் படி எப்போதும் நடந்து கொள்வேன்.

இப்போரில் எனக்கு நேரிடும் சிறைவாசம் முதலிய எல்லா கஷ்ட நஷ்டங்களையும் பொறுமையுடன் ஏற்றுக்கொள்வேன்.

சாத்வீகப்போரில் சேருவதற்காக எனக்காவது என் குடும்பத்துக்காவது பொருளுதவியை எதிர் பார்க்கமாட்டேன்.

பொதுவாக எல்லா விஷயங்களிலும் மகாத்மா காந்தி எதிர் பார்க்கும் வண்ணம் நடந்து கொள்ள முயல்வேன்.

கடவுள் துணை செய்க.

கையெழுத்து

தேதி வயது

விலாசம்.

---

உறுதிமொழியில் கண்ட விஷயங்களை நன்றாய் ஆலோசித்துக் கையெழுத்திட்டு அடியில் கண்ட விலாசத்திற்கு அனுப்பவும்:—

தமிழ்நாடு சத்தியாக்கிரஹ காரியாலயம்,
டாக்டர் ராஜன் வைத்தியசாலை,
கண்டோன் மெண்டு, திருச்சிராப்பள்ளி.

170734

## சுதந்திரப் பள்ளு

ஆடுவோமே—பள்ளுப் பாடுவோமே
ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று (ஆடு)

எங்கும் சுதந்திரம்
என்பதே பேச்சு—நாம்
எல்லோருஞ் சமமென்ப
துறுதியாச்சு
சங்கு கொண்டே வெற்றி
யூதுவோமே—இதைத்
தரணிக்கெல் லாமெடுத்
தோதுவோமே. (ஆடு)

நாமிருக்கும் நாடு நம
தென்ப தறிந்தோம்—இது
நமக்கே யுரிமையா
மென்ப தறிந்தோம்—இந்தப்
பூமியி லெவர்க்கு மினி
அடிமை செய்யோம்—பரி
பூரணனுக்கே யடிமை
செய்து வாழ்வோம். (ஆடு)

---

## வாழிய செந்தமிழ்

வாழிய செந்தமிழ்! வாழ்கநற் றமிழர்!
வாழிய பாரத மணித் திரு நாடு!
இன்றெமை வருத்தும் இன்னல்கள் மாய்க!
நன்மை வந்தெய்துக! தீதெலாம் நலிக!
அறம் வளர்ந்திடுக! மறம் மடி வுறுக!
ஆரிய நாட்டினர் ஆண்மையோ டியற்றும்
சீரிய முயற்சிகள் சிறந்துமிக் கோங்குக!
நம் தேசத்தினர் நாடொறும் உயர்க!
வந்தே மாதரம்! வந்தே மாதரம்.

# சத்தியப் போர்

(நாமக்கல் வெ. ராமலிங்கம் பிள்ளை)

கத்தியின்றி ரெத்தமின்றி
யுத்தமொன்று வருகுது
சத்தியத்தின் நித்தியத்தை
நம்பும்யாரும் சேருவீர். (கத்தி)

ஒண்டிபண்டி குண்டுவிட்டு
உயிர் பறித்த லின்றியே
மண்டலத்தில் கண்டிலாத
சண்டையொன்று புதுமையே. (கத்தி)

குதிரையில்லை யானை இல்லை
கொல்லுமாசை இல்லையே
எதிரியென்று யாருமில்லை
எற்றுமாசை இல்லதாய். (கத்தி)

கோபமின்றி தாபமின்றி
சாபமிட்டு வைவதும்
பாபமான செய்கையொன்றும்
பண்ணுமாசை யின்றியே. (கத்தி)

கண்டதில்லை கேட்டதில்லை
சண்டை யிந்த மாதிரி
பண்டைசெய்த புண்ணியம்
பலித்ததே நாம் பார்த்திட. (கத்தி)

காந்தியென்ற சாந்தமூர்த்தி
தேர்ந்துகாட்டும் செந்நெறி
மாந்தருக்குள் தீமைகுன்ற
வாய்ந்ததெய்வ மார்க்கமே. (கத்தி)

மகாத்மா ஆரம்பித்திருக்கும்

சத்தியாக்கிரகப் போரில்

சேருங்கள்

அல்லது

உடனே அப்போருக்குப்

பொருளுதவியாவது

செய்யுங்கள்.

சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரி.

---

பொருளுதவி பின்வரும் விலாசத்துக்கு அனுப்புக :—

டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன்,

கண்டோன்மெண்ட்,

திருச்சினப்பள்ளி.